2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சநத் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) பேரவைக்கு அறிவிப்பதற்கு முன்னாலே எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் வரும்? இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது.

திரு. துரை ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''செங்கை அண்ணா மேற்கு மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து வந்துள்ள கீழ்க்கண்ட செய்தியினைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:

''I have the honour to inform you that Thiru S.D. Ukamchand, Member of the Tamil Nadu Legislative Assembly, representing Maduranthagm Assembly Constituency, has been arrested along with 32 others on the night of 23 April, 1989 at Maduranthagam in connection with the Maduranthagam Police Station C.R. No. 201/89 under Sections 147, 148, 332 of I.P.C. and under Section 213 of the Tamil Nadu Public Properties (Prevention of Destruction and Damages' Act, 1982.)

3. தகவல் கோரல்.

(அ) இந்தியப் பிரதமர் பெங்களூரில் கூட்டியுள்ள தென்மாநிலப் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வது குறித்து.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே. நான் அரசிடமிருந்து—குறிப்பாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்— அரசாங்கத்திடமிருந்து ஒரு விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தென்பகுதியில் இருக்கும்படியான மாநிலங்களைச் சேர்ந்த ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், கேரள மாநிலம், தமிழகம் ஆகிய இந்த மாநிலங்களைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய மாநாட்டை, பெங்களூர் நகரத்திலே இந்தியாவினுடைய பிரதம அமைச்சராக இருக்கக்கூடிய திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மத்திய அரசாங்கத்தின் சார்பிலே கூட்டியிருக்கிறார்கள். இது நாம் எல்லோரும் அறிந்திருக்கிற உண்மை. அண்மையிலே நடந்த நிகழ்ச்சிகளின் காரணமாக, ஆந்திர மாநில அரசும், கேரள மாநில அரசும் அந்த மாநாட்டிற்குச் செல்வதில்லை. அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டிலே பங்கெடுத்துக் கொள்வதில்லை என்று